இதற்கெல்லாம், தயவுசெய்து நீங்கள் வக்காலத்து வாங்க வேண்டாம். (குறுக்கீடுகள்) அவருக்குத் தண்டனைக் கொடுத்தால்தான், மற்றவர்களுக்கு அது படிப்பினையாக அமையும். வேறு வழியில்லை. நடவடிக்கை எடுத்திருக்கிறேன். தயவுசெய்து அமருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை.

7. அரசினர் தீர்மானங்கள்

(அ) உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்களைப் பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரவையின் அலுவல்களை நடைபெற விடாமல் இடைமறித்தும், பேரவையின் விதிகளுக்கு மாறாக, அவையில் குந்தகம் செய்து வருவதாலும், சட்டமன்றப் பேரவை விதி 121(2)–ன்கீழ், இன்று அவைக்கு வருகை தந்திருக்கும், தொடர்ந்து சபையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்களை இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்க வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.
(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அவையின் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து இடையூறு செய்தும், அவையின் கண்ணியத்தையும், மரபையும் மீறி அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்து

கொண்ட, மரபுக்கு ஒவ்வாத வகையில் நடந்துகொண்ட திரு. ஜெ. அன்பழகன் அவர்கள், இந்தக் கூட்டத் தொடர் முடிகிற வரை, அவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்படுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து இந்தக் கூட்டத் தொடர் முழுவதும், அவர் இந்த அவையிலிருந்து நீக்கி வைக்கப்படுகிறார் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் (குறுக்கீடு)

பிற்பகல் 1–20

மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், ஒரு நிமிடம் இருங்கள். நீங்கள் பேசுவதற்கு நான் அனுமதி அளிக்கிறேன். இதுபோன்ற நிகழ்வுகளுக்கெல்லாம் வக்காலத்து வாங்க வேண்டாம். அவர் இன்றைக்கு அவையில் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை நீங்களும் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். உங்களுடைய தலைவர் அவர்களே அவருக்காக இந்த அவையில் வருத்தம் தெரிவிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை இங்கே அவர் உருவாக்கினார். பிறகு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, உறுப்பினர் வருத்தம் தெரிவித்தார். இது முதல் முறையல்ல. உறுப்பினர் ஏற்கெனவே இதுபோன்று பல முறை நடந்து கொண்டுள்ளார். என்னிடத்தில் அவையில் எத்தனையோ முறை இவ்வாறு அவர் நடந்து கொண்டுள்ளார். எவ்வளவு பொறுமை காக்க முடியுமோ அவ்வளவு பொறுமையாக இருந்து நான் அவரை அவையிலிருந்து நீக்காமல் வைத்திருந்தேன். ஆனால், இன்று ஆளுநர் உரையை கிழித்தது மட்டுமல்ல, என்னுடைய முகத்தில் வீசுவதுபோல, என்னுடைய டேபிளில் வீசியெறிந்துவிட்டு போயிருக்கிறார். (குறுக்கீடுகள்) இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு, நான் இந்த அளவிற்கு அவர்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறேன். இதற்குப் பிறகும் அவரை நான் இந்த அவையில் வைத்திருக்க வேண்டுமென்று எந்தச் சூழ்நிலையிலும், யாரும் சொல்ல மாட்டீர்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. எனவே, நான் எடுத்த நடவடிக்கை குறித்து யாரும் வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், நான் எடுத்த நடவடிக்கை, நடவடிக்கைதான். அதிலே எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

2020 ஜனவரி 7] [பேரவைத் தலைவர்]

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் கொடுத்த தீர்ப்பின்மீது நான் எந்தக் கருத்தையும் சொல்லவில்லை. நடைபெற்ற நிகழ்வு சரியென்று நான் வாதாடவும் இல்லை. காரணம், இந்த அவையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்தான் முதன்மையானவர். உங்களுக்கு முழு அதிகாரம் உண்டு. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோபமாகப் பேசும்போது, அதற்கு ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் பதில் சொல்வார்கள். அவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு, இந்த அவையை நடத்துவது என்பது சாதாரணமான காரியம் அல்ல. ஆகவே, இதுவரை நீங்கள் இந்த அவையை அப்படி நடத்தி வருகிறீர்கள் என்பதில் நான் மாறுபட்ட கருத்து கொண்டவன் அல்ல. ஆனால், இப்போது நடைபெற்ற நிகழ்வுக்காக நான் வக்காலத்து வாங்குகிறேன் என்று நீங்கள் தவறாக நினைக்கக் கூடாது. யார் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கு உங்களுக்கு முழு அதிகாரம் உண்டு. அதில் ஒன்றும் தவறு இல்லை. அவையிலிருந்து இந்தக் கூட்டத் தொடர், அதாவது இன்னும் 2, 3 நாட்களுக்கு அவரை நீக்க வேண்டுமென்று . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கூட்டத் தொடர் மட்டுமல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்து வருகிற இந்தக் கூட்டத் தொடர் முடிகிற வரை நீக்கியிருக்கிறேன். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: *அதுபற்றி பின்னர் பேசிக்கொள்ளலாம். பின்னர், நீங்கள் அதை தாயுள்ளதோடு மன்னிப்பீர்கள். அதுகுறித்து நான் இப்போது பேசவில்லை. நீங்கள் சொன்னவுடன், தயாராக,* pre–prepared *ஆக தீர்மானத்தை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் படிக்கிறார் என்றால், இது முதலிலேயே* plan *போட்டு வந்ததுபோன்றுதான் தெரிகிறது. இது நியாயமாகத் தெரியவில்லை. இது ஏற்கெனவே. . .(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதுமாதிரி நினைத்துக்கொண்டிருந்தால் அது தவறு. நான், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைத் தீர்மானத்தை முன்மொழியுங்கள் என்று கேட்டுக்கொண்டதற்குப் பிறகு, செயலாளர் அவர்கள் அதற்குரிய குறிப்புகளை அவரிடத்தில் கொடுத்த பிறகுதான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் படித்தார்களே தவிர, முன்னேற்பாடுகள் என்று எதுவும் இல்லை. (குறுக்கீடுகள்) அவையெல்லாம் எப்போதுமே அவையில் தயார்

நிலையில் இருக்கும். அந்தத் தீர்மானத்தில் யாருடைய பெயரும் இருக்காது. அவசர அவசரமாக அதைக் கையால் எழுதி, அவசர அவசரமாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடத்தில் கொடுத்து படிக்க வைத்தார்களே தவிர. . .(குறுக்கீடுகள்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தாளினை உயர்த்திக் காண்பித்தார்.)

இல்லை, இல்லை. இப்போது எழுதியதுதான். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் ஆட்சியில் இருந்தாலும் பொதுவாகவே, பேரவைத் தலைவர் பொறுப்பில் இருக்கக்கூடியவர்கள் எல்லாவற்றிற்கும் முன்னேற்பாடுகளோடுதான் இருப்பார்கள். இதுபோன்று அவைக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கக்கூடிய தீர்மானத்தை முன்மொழிய, (குறுக்கீடுகள்) அண்ணன், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா இங்கே கேளுங்கள். இதுபோன்ற தீர்மானங்களை டைப் செய்து தயார் நிலையில் வைத்திருப்பார்கள். அது உங்களுடைய ஆட்சிக் காலத்திலும், எங்களுடைய ஆட்சிக் காலத்திலும் இருந்த நடைமுறைதான். என்னிடம் வழங்கப்பட்ட குறிப்பில் யாருடைய பெயரும் இல்லை. பொதுவாகத்தான் தீர்மானத்தினுடைய ஷரத்துகள் இருந்தன. நான்தான் பெயரைக் குறிப்பிட்டுப் பேசினேன் என்பதற்கு விளக்கமாகப் பதில் அளிக்கிறேன்.

பிற்பகல் 1–25

19 ஆண்டுகளுக்கு முன்பு, 2001–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது, தொடர்ந்து 5 ஆண்டுக் காலம் மாண்புமிகு அம்மா அவர்களின் காவல் துறை மானியம் வந்தபோது ஒவ்வொரு வருடமும் உங்கள் கட்சியின் சார்பாக அவர் பேசுவதற்கு நீங்கள் வாய்ப்புகள் கொடுத்தீர்கள். ஒவ்வொரு முறையும் அவர் ஏதாவது பிரச்சினையைக் கிளப்பி, வில்லங்கத்தை இழுத்து, இங்கு வந்து எல்லாவற்றையும் கிழித்துப் போட்டுவிட்டுத்தான் போயிருக்கிறார். என்னுடைய நினைவில் கிட்டத்தட்ட 9 முறை அவர் இங்கே வந்து பாலிசி நோட்டினையோ, கவர்னர் உரையினையோ, நிதிநிலை அறிக்கையினையோ

2020 ஜனவரி 7] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கிழித்துப் போட்டதாகத்தான் வரலாறு இருக்கின்றதே தவிர, வேறு வரலாறு இல்லை. எவ்வளவோ சந்தர்ப்பங்கள் நாங்கள் கொடுத்தோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட வருத்தம் தெரிவித்தார். அதற்குப் பிறகும் அவர் தன் நிலையை மாற்றிக்கொள்ளவில்லை என்றால் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் எந்த வழியைக் கடைப்பிடிப்பார்? இதுதான் சரியான வழி என்பதை அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் ஏற்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இந்தத் தீர்மானத்தை நீங்கள் பிறகு வந்து பாருங்கள்,* (குறுக்கீடு) *இல்லை, இப்போதுதான் நாங்கள் அதனை* prepare *செய்தோம்.* (குறுக்கீடு) *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைக்கூட ஒத்துக்கொள்கிறேன். நான் தங்களையும், பேரவை முன்னவரையும், முதல்வரையும் கேட்டுக்கொள்வதெல்லாம் நடந்தவற்றுக்கு நான் வக்காலத்து வாங்கவில்லை. அதனை முதலில் தெரிந்துகொள்ளுங்கள். இருந்தாலும், இந்தக் கூட்டத் தொடர் மட்டும், இன்றும், நாளையும் அதுவரையில் மட்டும் இந்தத் தண்டனையைத் தாங்கள்* confirm *செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இரண்டு நாட்களுக்கு மட்டும், நாளையும், நாளை மறுநாளும், அதன் பிறகு விட்டுவிடுங்கள்* please. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்து பிறகு எனது அறையில் தனியாகப் பேசலாம், உட்காருங்கள்.*

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்ன மருது, பெரிய மருது என்கிற வேலு நாச்சியார் படைத் தளபதிகள், வெற்றிபெற்ற வரலாறு சீமையிலும் உண்டு. இப்படி, ஆன்மிகம் தொடங்கி அறிவியல் வரை சகோதர கூட்டணி,*